இலவச வெளியீடு

உ

சிவமயம்



# தமிழ் மரபும் வேத நெறியும்


பிரசுரம் செய்வோர் :

**வே. சிவக்கொழுந்து**

( சாஸ்திரி )

காரைதீவு, கி. மா.


**நந்தவனப்பிள்ளையார் கோயில்**

சௌமிய ௵ ஐப்பசி ௴

**1969**

சிவமயம்

மட்/காரைதீவு மகாவித்தியாலய, நவராத்திரிக் கலை விழாவின்போது வித்வான் பு. பொ. வை அவர்களின் மாணாக்கர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.

(சைவ மதப் பற்றும், தமிழ் மொழிப்பற்றும் வாய்ந்த கிராமத்தின் பொறுப்புணர்ச்சியுள்ள உள்ளம் படைத்த அன்பர்கள், சிலரதும் ஆலய நிருவாகிகள் சிலரதும் கேள்விப்படி இப்பிரசுரம் வெளிவருகின்றது.)

## ஆரியம் தழுவாத் தனித்தமிழ் நாகரீகம் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. தமிழ் இலக்கியமே சான்று தரும்

'பார்ப்பாரைத் தொலையுங்கள், புரோக்கர்மார் ஆலயங்கட்கு வேண்டாம், பண்டைத் தமிழனின் பண்பாட்டைப் பின்பற்றுங்கள். நாமே நமக்குரிய தேவார திருவாசகங்களைப்பாடி எமது உள்ளக் கமலங்களையே இறைவன் திருமுன்னிலையில் ஒப்படைத்து அருள் பெறலாம் சுலோகங்களைக் குழி தோண்டிப் புதையுங்கள் என்றெல்லாம் விபுலாநந்த அடிகளாரின் உருவச் சிலைத் திறப்பு விழாவின்

போதுகூட ஒலி பெருக்கிகள் கதறவும், கேட்போர் காதுச்சவ்வுகள் வெடிக்கவும், கனல் கக்கியோர் எத்தனை பேர்? மறத்தமிழன், வீரத்தமிழன், மானமாக வாழ்ந்த தமிழன் என்றெல்லாம் குழறாத வாயெதனையும் யாம் கண்டிலோமே.

ஆனால் ஆன்றமைந்த நுண்ணுணர்வும் பழுத்த அனுபவமும், தவறாத் தனிமரபும் இறைவன் திருவடியிற் பதிந்த சிந்தையும், பல கலையறிவும் உடையோர் இவற்றை வீண்பிதற்றல் என மனத்துட் கொண்டு வாளாவிருக்கின்றனர். இருப்பதுவும் பிதற்றலை ஏற்றுக்கொண்டதாக முடியுமன்றோ. இளம் வாலிபர்களினதும் குழந்தைகளினதும் பிஞ்சு உள்ளங்களில், இந்த மவுட்டீகமான போதனைகள் பசுமரத்தாணிபோற் பதியுமானால் வருங்காலத்தில் நமது சமயத்தின் நிலையென்ன? பார்ப்பாரைப் பிடர்பிடித்துத் தள்ளிவிட்டு, பல்லும் பிடுங்குதற்குக் குறடு தேடிக் கொல்லன் வீடுவரையலையும் நிலையும் உருவாகாதா?

பார்ப்பானே படிக்கு அப்பாற் போ, வுறோக்கர் வேலை எங்கட்கு வேண்டியதில்லை என நவநாகரீக மதத்தலைவர்களின் அடிச்சுவடு தழுவி மார்புதட்டி வீரமுழக்கம் செய்யும் வீரர்களே! சற்றுச் சிந்தியுங்கள்! பகுத்தறிவைப் பயன்படுத்துங்கள்!

## தனித்தமிழ்ப் பண்டைப்பண்பு யாது ?

( ஆராய்ச்சி )

ஒரு இனத்தினுடைய தொன்மை நாகரீகத்தை அறிதற்குப் பிரதானமாவன, புதைபொருள் ஆராய்ச்சியும், தொன்மை நூல்களுமேயாம்.

**' பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்**
**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்க '**

( சிலப்பதி )

கடல் கொண்ட தமிழ் நாட்டைப்பற்றிப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் எதனையும் கூறிற்றிலர். ஆனமையின் நமக்குச் சான்று பகர்வன, அகத்தியமும். தொல்காப்பியமுமே அகத்தியமும் ஒருசில, சூத்திரங்கள் மட்டுமே கிடைத்துள்ளனவாதலின் அதுவும் நம் பழைய ஆராய்ச்சிக்கு உதவாவாம்- அடுத்தவை சங்க இலக்கியங்களாம். இவற்றை நாம் விருப்பு வெறுப்பு இன்றி 'சமன் செய்து சீர் காக்கும் கோல்போ' லென்றாங்கு நடுநின்று ஆராய்வோம்.

தமிழ் நாகரீகத்தின் ஆணிவேர் போலான அகத்திணைக்குத் தெய்வம் அமைக்குங்கால்,

**' மாயோன் மேயகாடுறை உலகமும் ...**
**வருணன் மேய பெருமணலுலகமும் '**

எனச் சூத்திரம் செய்கின்றார் தொல்காப்பியர்

ஆசிரியரது இருக்கு வேதத்துள் விதந்துரையாடும்
தெய்வமன்றோ, இந்திரனும் வருணனும் இவர்கள்
நமது தனித்தமிழ்த் தெய்வமா? மலையும் மலை
சார்ந்த நிலமுமான குறிஞ்சித் திணைக்குத் தெய்வ
மாக, நம் தனித்தமிழ் தெய்வமான முருகனையும்

'முல்லையும் குறிஞ்சும் முறைமையிற்றிரிந்து
... பாலையென்பதோர் படிவங்கொள்ளும்'

(சிலப்பதிகாரம்)

என்றாராயினும் அதுவுமோர் திணையேயாமாதலின்
அப்பாலைத் திணைக்குத் தெய்வமான கொற்றவை-
(துர்க்கை) என்னும் இவ்விரண்டு மட்டுமன்றோ
நமக்குரிய சொந்தத் தெய்வங்கள். மேலும் வட
மொழிப் பதங்கள் தமிழில் எவ்வாறு வழங்கப்பட
வேண்டுமென்று கூட வரையறம்பு செய்து சூத்தி
ரமும் செய்தும் விட்டாரே தொல்காப்பியர் இவ்
வாறு இலக்கணம் அமைத்தது: ஆரியனா? தமி
ழனா? என்றுதான் கேட்கின்றேன். நமது முது
பெரும் தனித்தமிழ்ப் பாட்டன் அன்றோ இந்தத்
தொல்காப்பியன் சரி இவன் ஆரியரது சூட்சி வலை
யிற் சிக்குண்டு, மதிமயங்கித் தன் இனத்திற்கே
மாசு தேடிவிட்டானென்று இவனைத் தள்ளிவிட்டுச்
சங்க இலக்கியங்கட்கு வருவோம்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கெனுமிவை அந்தத் தொல்காப்பியன் வகுத்த திணைகளையும் தெய்வங்களையும் அவற்றிற் குரிய, முதற்பொருள் உரிப்பொருள்; கருப்பொரு மாய இவற்றையன்றோ அடிப்படையாகக்கொண்டு பிரகாசிக்கின்றன. புறநானூற்றில் பின்வரும் வரிகளைச் சிந்தியுங்கள்.

'ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும் பிணியுடையீரும் பேணி
தென்புலம் வாழ்நர்க் கருங்கடனிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறுதீரும்'

என் திருக்குறள் படைத்த வள்ளுவர் தான் என்ன? புறநானூற்று ஆசிரியர்; பசு பார்ப்பார், பெண்டிர் பிணியுடையோர்; தென்புலம் வழநர் என்ற முறையானே அமைப்ப; வள்ளுவர் '**தென் புலத்தார்** ... **ஓம்பல்தலை**' என்று, தென்புலத் தோரை முன்னாட்டியன்றோ குறளைப் படைத்து விட்டார்:

தென்புலத்தார் என்றது யாரை? நமது இறந்து பட்ட முன்னோரையன்றோ! இவர்க்குரிய மகாளய -சிராத்த மாதியாம் அருங்கடன் யார்மூலம் இறுப் பது? எப்படி இறுப்பது? 'தேவாரத்தைப் பாடி நீயே பூசை முடி' என்கின்ற பகுத்தறிவாளர்கள் தென்புலத்தார் கடனை 'இன்னவரைக் கொண்டு செய்' எனச் செப்பாது விட்டனரே. போகட்டும்'

'நின் முன்னோரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்'

என்றெல்லாம் பதிற்றுப் பத்து முழக்கம் செய்கின்றதே- இருக்கட்டும் சங்க இலக்கியம் செய்த நம் தனித்தமிழ் இனப் பாட்டமாராம் புலவோர்களும். குலத்துக்குப் பிறந்த கோடரிக் காம்புபோலாய் தமது இனத்திற்கே மாறாத வசையை ஆரியரின் சூட்சியின் பாற்பட்டுச் செய்து விட்டார்களெனக் கொண்டு அவர் தம் இலக்கியங்களையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு ஐம்பெருங்காப்பியங்கட்கு வருவோம்-

வழக்கொழிந்தனபோக வழங்குவனவற்றுள் முதன்மை பெற்றுத் திகழ்வது இளங்கோ செய்த சிலப்பதிகாரமல்லவோ ! இச்சிலப்பதிகாரத்திற்றும் தனித்தவோர் தமிழ்மரபு இயங்குகின்றதா? காவிரிப்பூம் பட்டினத்தில் கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமண வைபவமான பகுதியைப் பாருங்கள், இருவரும் எவ்வாறு மணம் புரிந்தனர்.

'சாலியொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட
தீவலம் செய்வது காண்பார்கள் நோன்பென்னை'

பார்ப்பான் மறைவழி காட்டிட மணம் செய்தன ரானமையின் இவளும் இவனும் ஆரிய நாகரீகம் தழுவிய இழிசனர்களென இகழ்ந்துரையாடித் தள் ளிவிடுவோமா? இன்னும் பார்ப்போம். இந்திர விழாவெடுத்த கதையை நோக்குவோம்.

'வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசக்
கச்ச யானைப் பிடர்த் தலை யேற்றி' எனவும்
'மண்ணகம் மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீராட்டி'

என வருதலின் ஆரியக் கடவுள் இந்திரனுக்கு விழா வெடுத்தோர் யாவர்? நம் தமிழ் இனமா? வேறு யாருமா? கோவலனும் மாதவியும்கூட இவ்விழா வில் பங்கு கொள்ளவில்லையா? போகட்டும்- மது ரையை எரிவாய்ப் படுத்துகையில் 'பார்ப்பார், அற வோர், பசு-பத்தினிப் பெண்டிர், மூத்தோர்குழவியெனும் இவரைக் கைவிட்டுத் தீத்திறத்தோர் பக்கமே சேர்க' என்று காளிபோல் உருமாறிக் கனன்றவள் யார்? நமது கண்கண்ட தெய்வம் கண்ணகிதானே பார்ப் பார்க்கு முதலிடம் கொடுக்கின்றாள்- இவள் தன் மானம் கெட்ட பெண் என ஒதுக்கிவிடுவதா?

இனி இந்நூலாசிரியர் பக்கம் திரும்புவோம்- சேரநாட்டு அரச குமாரனன்றோ இளங்கோவடிகள் முற்கூறிய புலவோர்களைத் தான் ஆரியர்கள் அடி

மையாக்கி விட்டனரென வைத்துக் கொள்வோம். இளங்கோவுமா அடிமையாவான்? இமையச் சிமயத்து விற்கொடி பொறித்து, கனகவிசயர் தலையிற் கல்லேற்றிக் கொணர்ந்தன்றோ; கற்பின் செல்வி கண்ணகைக்குச் சிலைவடித்த தனித்தமிழன். வீரத்தமிழன் இவனும் பார்ப்பார்க்கு முதலிடம் கொடுத்துத்தானே காப்பியம் செய்துள்ளான். ஆதலின் இவனும் தனது இனத்திற்கே கரிப்பூசிவிட்டானென்று கொண்டு சிலப்பதிகாரத்தையே தட்டிக் கழித்துவிடுவோமா?

அன்பர்களே;

ஓர் பானைக்கு ஓர் அவிழ்பதம் பார்ப்பது போல் ஆராய்வோம். இதிகாசங்கட்கு வருவோம் இராமாயணத்தில் ஓர் இடம் - ....... . ஙரியமாலினும் கண்ணுதலானினும், **பெரியரந்தணர் பேணுநிருள்ளத்தால்'**

பகுத்தறிவாளர்க்கு இந்த இடம் நெருப்பெழச் செய்தது. சீ- பாழ்பட்ட மரியாதை அற்றவன் கம்பன் இவனுக்குத் தன்மானமில்லையா? ஐயோ! என்னசெய்துவிட்டான்- என்று மாற்றுமருந்தாக அந்தணர் என்ற சொல்லுக்கு 'அழகிய தண்ணளியுடையோரென்று (திருக்குறள் 'அந்தணர் என்போர் அறவோர் ...... என்ற) குறளுக்கு வியாக்கியானமொன்று படைத்தார்களே! தருமர் மனக்

குடவர் - தாமத்தர் - நச்சர் - பரிதி - பரிமேலழகர் ஆதியாம் உரையாசிரியர்கள் கண்டுபிடியாத உரையை அன்ருே இவர்கள் கண்டுவிட்டார்கள்- ஆகா! சபாஸ்- நன்று- கம்பனும் ஆரியர்க்கடிமைப்பட்டவனே என்று இவனையும், இராமாயணத்தையும் நாமும் இங்கே இன்னேர் முறை வாயினுலாவது டெரித்துவிட்டு புராணங்கட்கு வருவோம்.

புராணங்கட்குட் தலை சிறந்த; பெரிய புராணத்துள் சேக்கிழார் " **வேதநெறி தழைத்தோங்க** " என்று கூறிவிட்டனரே. ஆதலின் இதனையும் வெட்டிப்புதைத்துவிட்டு, தேவார திருவாசகத்திடம் போவோம். இவற்றைத்தானே பகுத்தறிவாளர்கள் சிலர்தெரிவுசெய்து அன்று நம்கையிற்றூக்கித்தந்து விட்டுப் போயினர். எனினும் நாமும் சற்று அலசிப்பார்க்க வேண்டாமா? சமயாசாரியர் நால்வரில் சுந்தரர் தாம்பாடிய திருத்தொண்டர்த் தொகையில் தொடக்கத்திலேயே யாது சொல்கின்ருர்? " **தில்லைவாழ் அந்தணர்** தம்மடியார்க்கும் அடியேன் " இதற்கு மாற்று மருந்து என்ன என்றுதான் கேட்கின்றேன். மேலும் சம்பந்தர் வேத நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாம நமச் சிவாயவே இதற்குப் பகுத்தறிவாளர்கள் என்ன சொல்லப் போகிருர்கள்.

அன்பர்களே! இதுவரை நாம் ஆராய்ந்தன போதும் இந்த இடத்தில் நாவலர் பெருமான் எழுதிவைத்த சில குறிப்புக்களை ஆதாரமாகக்கொண்டு ஒரு முடிவுக்கு வருவோம்-

வடமொழியும் (சமஸ்கிருதம்) தென்மொழியும் (தமிழ்) எப்படியெனின் 'ஓராவிற்கு இரு கோடு தோன்றினுற் போலவாம்- இவ்விரு கொம்புகளில் முற்றோன்றிய கொம்பு யாது? சிறப்புடைய கொம்பு யாது எனக் கேட்பதற்கு இடமுண்டா? இதுபோல குறித்த இரு மொழிகளிலும் வாதிடுவதற்கு நமக்கு இடமில்லை- அவசியமுமில்லை- பிரயோசனமும் இல்லை- தொல்காப்பியரது காலத்துக்கு முன்னரேயே இவ்விரு மொழிகளும் பின்னிப்பிணைந்து தனி **அழகும்** பயனும் பெற்றுவிட்டன என்பதும், இதனுற்ருன் தொல்காப்பியர் இவ்வாறு இலக்கணம் செய்ய வேண்டிவந்த தென்பதும் ஆன்ருேர் கண்ட முடிபாம்- இதனுற்ருன் நாவலர் பெருமான் கூடத் தனித்தமிழில் ஆலய வழிபாட்டு முறையை அமைக்க முன்வரவில்லை.

மாணவ மாணவிகளே! எதிர்கால உலகம் உங்கள் கையிற்ருன் இருக்கின்றது- பகுத்தறிவாளர்கள் அள்ளி இறைக்கும் முத்துக்கள் விஞ்ஞான உதவி கொண்டு தயாரிக்கப்பட்ட நித்திரைக் குளி

கைகள் போலவாம்- இவை அபாரசக்தி வாய்ந்தன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை- ஆனல் அறிவு முதிர்ச்சி பெருத குழந்தைகளிடம் இவற்றை அள்ளிக்கொடுப்பதுதான் பேராபத்து என்பதை இங்கு சுட்டிக் காட்டுகின்றேன்- இப்படித்தான் உள்ளக் கமலத்தைத் தேவாரம் பாடி ஒப்படையுங்கள்- வுரேக்கர்மார் ஆலயங்கட்கு வேண்டாமென நமக்குப் புகட்டுவது மாமென்க-

சைவ சமயீகள் நியமமாகச் செபிக்கவேண்டிய சிவமூல மந்திரம் யாது? ஸ்ரீபஞ்சாட்சரம் (நாவலர்) காலை மாலை ஒருவன் ஸ்ரீ பஞ்சாட்சரம் செபிக்க வேண்டுமானல் -

வடமொழியை உச்சரியாது செய்யமுடியுமா? நித்திய கரும விதிகளாய அநுட்டான மந்திரங்களெல்லாம் வடமொழியிலுள்ளனவன்றே !

'நிறைமொழி மாந்தர் நிலைமையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திரமென்ப' (தொல். சூத்)

வேதாகம முறைப்படி அருச்சிக்கப்பட்ட கோயில்களிலேயே வேதவிதி வழுவாது நமது சமய குரவர்கள் வழிபட்டனர்- தமது தேவார திருவாசகங்கள் பிற்பட்ட காலத்து அருச்சனை மந்திரங்களாக மாறவேண்டுமென்று எங்கேனும் குறிப்பிட்

டுள்ளனரோ ? நாமறியோம். இத்தேவார திருவாசகமாதியவற்றிற்கும் பூசா விதிமுறையுள் தக்க முக்கிய இடம் கொடுபட்டுள்ளதை அறியாதார் யாவர்-

சுருங்கச் சொன்னல் வேதாகமங்களையும் பிராமணரையும் தூஷித்துக்கொண்டு ஒருவன் சைவனுக இருக்கமுடியாது- வடமொழியை உச்சரியாது ஒருவன் சைவனுக இருக்கவும் முடியாது- ( 28-8-1950 புத். 65 இல- 31 இந்துசாதனம் )

ஆதலின், அன்பர்களே சமய வழிபாட்டுமுறைகள், ஆலய நிருவாக முறைகள் பேரில் உங்கள் மனதிலேற்பட்ட சந்தேகங்கள், தப்பான அபிப்பிராயங்கள் மனத்தை விட்டு அகன்று போகட்டும். நம் மூதாதையரது அடிச்சுவட்டைப் பின்பற்றி, வேதாகம விதிப்படி ஒழுகி நல்வாழ்வு பெற்றுவாழ, பராசத்தி நமக்கு இன்று அருள் புரிவாராக,

**" வாழ்க அந்தணர் வானவரானினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக**
**ஆழ்க தீயதெல்லா மரன் நாமமே**
**சூழ்க வையக முந்துயர் தீர்கவே " —**

( சம்பந்தர்)

**சுபம்.**

பிரசுரம் செய்வோர்:- **வே. சிவக்கொழுந்து**
**சாஸ்திரி.**

மொடேண் அச்சகம், கல்முனை.